## பொங்கும் விவசாயிகள்... புழுங்கும் முகவர்கள்!

# ஆவினுக்கு ‘பால் ஊற்றும்’ ‘டம்மி’ முதல்வர்!

## கொந்தளிக்கும் மக்கள்!

**ஆ**வின் பால் தட்டுப்பாடு அதிகரித்துவரும் சூழலில், “உயர்ந்துவிட்ட விலைவாசி உயர்வுகளுக்கு ஏற்ற வகையில், பால் கொள்முதல் விலையையும், பால் முகவர்களின் கமிஷன் தொகையையும் உயர்த்தாவிட்டால், ஆவின் நிர்வாகமே விரைவில் அழிந்து போகும்” எனக் கொதிப்புடன் சாபமிடுகிறார்கள் பால் உற்பத்தியாளர்களும் முகவர்களும்!

இது குறித்து ‘தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச் சங்க’த்தின் பொதுச்செயலாளர் எம்.ஜி.ராஜேந்திரனிடம் கேட்டபோது,“உணவுப் பொருள்களின் விலைவாசி நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால், குழந்தை முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் அத்தியாவசியத் தேவையான பாலுக்கு மட்டும் உரிய உற்பத்தி விலையைக் கொடுக்க அரசு மறுத்துவருகிறது.

ஒரு லிட்டர் பசும்பால் உற்பத்திக்கான தீவனம் உள்ளிட்ட செலவு 60 ரூபாயையும் தாண்டுகிறது. ஆனால், இப்போதுதான் ஒரு லிட்டர் பால் கொள்முதலுக்கான விலையை, தமிழக அரசு 44 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. தற்போது உயர்த்தப்பட்டுள்ள இந்த 6 ரூபாயில், ஒரு ரூபாயை மட்டும் அரசு நேரடியாக வழங்குவதாகவும், மீதமுள்ள 5 ரூபாயை ஊக்கத்தொகையாக வழங்கவிருப்பதாகவும் திட்டமிட்டிருக்கின்றனர்.

ஊக்கத்தொகை என்பது அரசு நிதி ஒதுக்கிய பிறகே, ஆவின் கூட்டுறவு சங்கங்களுக்குக் கிடைக்கும் என்பதால், உயர்த்தப்பட்ட இந்த 5 ரூபாயும் பால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படும்.

அடுத்ததாக 4.3% கொழுப்புச்சத்து, 8.2% இதர சத்துகளைக்கொண்ட பாலுக்கு மட்டும்தான் இந்த 44 ரூபாய் கிடைக்கும். ஆனால், மொத்த பால் உற்பத்தியில் வெறுமனே 10% மட்டுமே இந்தத் தரத்தில் கிடைக்கும். மீதமுள்ள 90% இந்தத் தரத்துக்குக் கொஞ்சம் குறைவானதாகத்தான் இருக்கும். இது போன்ற தரம் குறைந்த பாலுக்கு, ஒன்றிரண்டு ரூபாயைக் குறைத்துத்தான் கொடுப்பார்கள். இது மட்டுமல்லாமல், கூட்டுறவு சங்க செலவுகளுக்காக, ஒவ்வொரு லிட்டர் பாலுக்கும் ஒரு ரூபாய் 25 காசு பிடித்தமும் செய்துகொள்வார்கள்.

இப்படித் தொடர்ச்சியாக நஷ்டத்தையே சந்தித்துவரும் பால் உற்பத்தி விவசாயிகளில் பெரும்பாலானோர் மாடுவளர்ப்புத் தொழிலையே விட்டுவிட்டனர். இதனால் 32 லட்சம் லிட்டர் என்ற அளவில் இருந்த ஆவின் கொள்முதல் இன்று 27 லட்சம் லிட்டராக சுருங்கிப் போய்விட்டது. இந்த நிலையில், தற்போது இருக்கின்ற பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் அரசு, ஒரு லிட்டருக்கான கொள்முதல் விலையை ரூ.60ஆக உயர்த்தித் தர வேண்டும்” என்றார் கோரிக்கையாக.

தொடர்ந்து தனியார் பால் நிறுவனங்களின் செயல்பாடு பற்றிப் பேசியவர், “தனியார் பால் நிறுவனங்கள் 45 ரூபாய்க்கும் அதிகமாக விலை கொடுத்து பால் கொள்முதல் செய்கின்றனர். பாலின் தரம் கொஞ்சம் குறைவாக இருந்தாலும்கூட விலையில் எந்தவித மாறுதலும் செய்வதில்லை. பாலுக்கான பணத்தையும் ஆவின் நிர்வாகம்போல் இழுத்தடிக்காமல் உடனுக்குடன் பட்டுவாடா செய்து விடுகின்றனர். இதனால் பால் உற்பத்தியாளர்கள் தனியாருக்குப் பால் வழங்க அதிக ஆர்வம் காட்டுகின்றனர்” என்றார்.

இதற்கிடையே ‘தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்க’த்தின் நிறுவனத் தலைவர் பொன்னுசாமி நம்மிடம் பேசும்போது, “பால் முகவர்களுக்கான கமிஷன் தொகையை உயர்த்திக் கொடுக்குமாறு, கடந்த நாங்கள் போராடிவருகிறோம். அது குறித்து காது கொடுக்காத தமிழக அரசு, தற்போதுதான் ஆவினுக்கான பால் கொள்முதல் விலையை உயர்த்தியிருக்கிறது.

**டாஸ்மாக்கில் வெளி மாநில மதுபானங்கள் கொண்டு வந்து விற்க முயலும் அரசு, பச்சிளம் குழந்தை அருந்தும் பாலுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய வேண்டாமா?**

அப்போதும்கூட உயர்த்தப்பட்ட கொள்முதல் விற்பனைக்கு ஏற்ற வகையில், விற்பனை விலையை உயர்த்தவில்லை. இதனால், ஆவினுக்கான நிதியிழப்பு பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. மேலும் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டும் ஆவினுக்கான பால் வரத்தும் அதிகரிக்கவில்லை.

எனவே, கர்நாடகா மாநில கூட்டுறவு பால் நிறுவனமான நந்தினியிடமிருந்து கூடுதல் விலை கொடுத்து பால் கொள்முதல் செய்வதோடு,வடமாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் வெண்ணெய், பால் பவுடரைக்கொண்டும் தட்டுப்பாட்டைச் சமாளித்துவருகின்றனர். இது மட்டுமல்லாமல், ஆவின் நஷ்டத்தைக் குறைக்கும் முயற்சியாக, பால் விற்பனையைக் குறைக்க வலியுறுத்தி ஆவின் நிர்வாகத்திலிருந்தே வாய்மொழி உத்தரவும் பிறப்பித்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக ஆவின் பாலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, த.வெ.க அரசுக்கு அவப்பெயர் ஏற்பட்டிருக்கிறது. கூடவே, பால் முகவர்களும் வாழ்வாதாரத்தை இழந்து, விழிபிதுங்கி நிற்கின்றனர்.

எதிர்க்கட்சிகளுக்குப் பயந்துகொண்டு ஆவின் பால் விலையை உயர்த்தாமல் இருக்கிறது த.வெ.க. அரசு. இதனால் பால் உற்பத்தியாளர்கள், முகவர்கள் நஷ்டமடைந்து தொழிலே அழிந்துபோவதோடு, த.வெ.க அரசுக்கும் கெட்ட பெயர்தான் கிடைக்கும்” என்றார் அழுத்தமாக.

டாஸ்மாக்கில் வெளி மாநில சரக்கைக் கொண்டு வந்து விற்க முயலும் அரசு, பச்சிளம் குழந்தை அருந்தும் பாலுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய வேண்டாமா?

நன்றி
**‘ஜூனியர் விகடன்’**
23.09.2026



தாராபுரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் சிஎஸ்ஐ கிறிஸ்துவ பேராலயத்தில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணை செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் தாராபுரம் நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி உள்பட மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## முதல்வர் ரங்கசாமி ஆட்சியில்

# புதுச்சேரி எந்தவொரு வளர்ச்சியும் இல்லாமல் பின்தங்கி உள்ளது!

## தேர்தல் பரப்புரையில் தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா பேச்சு!

புதுச்சேரி, செப். 22-

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் சேது செல்வம் போட்டியிடுகிறார். அவருக்கு தி.மு.க. நிர்வாகிகள் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்கள். அதன் ஒரு பகுதியாக தட்டாஞ்சாவடி மாரியம்மன் கோவில் வீதியில் கொள்கை பரப்பு செயலாளரும், புதுச்சேரி மாநில தேர்தல் பொறுப்பாளருமான எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., தமிழக முன்னாள் அமைச்சரும், மாநில துணை செயலாளருமான க. பொன்முடி, புதுச்சேரி மாநில அமைப்பாளர் இரா. சிவா, விழுப்புரம் மத்திய மாவட்டச் செயலாளர் டாக்டர் ஆ. லட்சுமணன் எம்.எல்.ஏ., விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. செந்தில்குமார், விக்னேஷ் கண்ணன், வானூர் சட்டமன்ற உறுப்பினர் கௌதம் திராவிடமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ.மூர்த்தி, நந்தா டி. சரவணன் ஆகியோர் வீடு, வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். தொடர்ந்து மாலையில் அவ்வை நகர், புதுப்பேட், முத்துலிங்கம்பேட், குறிஞ்சி நகர் பகுதியிலும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.





அப்போது தி.மு.க. வேட்பாளர் சேது செல்வதற்கு பொதுமக்கள் மலர்கள் தூவியும், ஆரத்தி எடுத்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்தை வெற்றி பெற வைத்தால், தட்டாஞ்சாவடி தொகுதி மக்களின் அடிப்படை தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி தருவார் என்றும், கடந்த 10 ஆண்டுகளாக இந்தப் பகுதியில் ஆளும் பா.ஜ.க. என்.ஆர். காங்கிரஸ் அரசு எந்த ஒரு அடிப்படை வசதிகளையும் செய்து தரவில்லை என்றும் தி.மு.க. நிர்வாகிகள் பொது மக்கள் மத்தியில் எடுத்துக் கூறினர்.

குறிஞ்சி நகர் பகுதியில் தி.மு.க. மாநில அமைப்பாளர் இரா. சிவா பேசியதாவது: புதுச்சேரியில் தி.மு.க. ஆட்சி வர வேண்டும் என மக்கள் விரும்பினார்கள். ஆனால் தி.மு.க.வுடன் இருந்த கூட்டணி கட்சிகள் நட்பு போட்டி என்ற சூழ்ச்சி செய்தனர். புதுவையில் என்.ஆர்.காங்கிரஸ் கட்சி ஆட்சி நடக்கிறது. இந்த ஆட்சி மக்களால் விரும்பி கொண்டு வரவில்லை. அதிர்ஷ்டத்தில் தான் ரங்கசாமி முதல் அமைச்சர் ஆனார். தட்டாஞ்சாவடி தொகுதி தான் முதலமைச்சர் ரங்கசாமியை வளர்த்து ஆளாக்கியது. இந்த தொகுதி மக்களுக்கு ரங்கசாமி எதுவும் செய்யவில்லை. முதலமைச்சர் ரங்கசாமி தட்டாஞ்சாவடி தொகுதியை கைவிட்டுவிட்டார். மக்கள் மீது நம்பிக்கை இல்லாமல் கடந்த 2021ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் ஏனாமில் போட்டியிட்டார். ஆனால் ஏனாம் மக்கள் தோற்கடித்தனர். மீண்டும் கடந்த சட்டசபை தேர்தலில் தட்டாஞ்சாவடி, மங்கலம் ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டார். தற்போது தட்டாஞ்சாவடி தொகுதி மக்களை மறந்துவிட்டு வேறு தொகுதிக்கு சென்றுவிட்டார்.

தட்டாஞ்சாவடி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் மக்களுக்காக பல்வேறு போராட்டங்களை நடத்திய சேதுசெல்வத்தை வேட்பாளராக நிறுத்தி உள்ளோம். முதல்வர் ரங்கசாமி மக்களை திரும்பி பார்ப்பது இல்லை. அவருக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும். புதுச்சேரியில் நல்லாட்சி நடக்க வேண்டும். புதுச்சேரியில் ஏராளமான பிரச்சினைகள் உள்ளது. புதுச்சேரி எந்தவொரு வளர்ச்சியும் இல்லாமல் மிகமிக பின்தங்கியுள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எஸ்.முத்துக்குமார்

### செப்டம்பர் 22 (2022)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து கோவை பகுதியில் கழகம் வளரபாடுபட்டவர்.**

**1953ஆம் ஆண்டு கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையை ஏற்று கலந்து கொண்டதற்காக தண்டனை பெற்று கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.**

**சிறையில் இருந்தபோது, மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்துவிட்டு விடுதலை பெறலாம் என்று அன்றைய அரசாங்கம் சொன்னபோது, “எனது உயிரற்ற உடல் வேண்டுமானால் வெளியே வரும். ஆனால், நான் மன்னிப்பு கேட்டு வெளியே வரமாட்டேன்.” என்ற முழக்கமிட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**சிறைவாசம் முடிந்து விடுதலை அடைந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறைவாசலில் வந்து வரவேற்ற பெருமைக்குரியவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.

## சென்னையில் டெங்கு பொதுமக்கள் அச்சம்!

சென்னை, செப்.22–

தமிழகத்தில் ஒரே நாளில் 253 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு உறுதியாகியுள்ளதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். சென்னை அண்ணா பல்கலைக்கழக விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் 70 பேருக்கு காய்ச்சல் பாதிப்புமற்றும்அறிகுறிகள்கண்டறியப்பட்டதால், மருத்துவப்பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் கொசு ஒழிப்பு உள்ளிட்ட பணிகள் தீவிரப்படுத் தப்பட்டுள்ளன.

தமிழகத்தில்டெங்குகாய்ச்சலைபரப்பும்‘ஏடிஸ்எஜிப்டை’வகைகொசுக்களின் பெருக்கம் அதிகரித்து வருவதால், டெங்குவால்பாதிக்கப்படுவோர்எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உட்பட மாநிலம் முழுவதும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை டெங்குகாய்ச்சலால்பாதிக்கப்பட்டுஅரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த 18ம் தேதி ஒரே நாளில் சென்னையில் சுமார் 100 பேர் என தமிழகம் முழுவதும் மொத்தம் 253 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். அதற்கு முந்தைய நாளில் 244 பேருக்கு டெங்கு பாதிப்புஉறுதிசெய்யப்பட்டுள்ளது.நடப்பு ஆண்டில்கடந்தஜனவரிமுதல்இதுவரை 16,830 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில்,காய்ச்சலால்பாதிக்கப்பட்டு சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவர் ஹரிஷ் குமார் சமீபத்தில் உயிரிழந்தார். அவர்டெங்குகாய்ச்சலால் உயிரிழந்ததாகதகவல்வெளியானதால், சக மாணவர்கள் அச்சமடைந்தனர்.

இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் சுமார் 6 ஆயிரம் மாணவர்கள் விடுதியில்தங்கிப் படிக்கின்றனர். கடந்தசில நாட்களில் இங்கு சுமார் 70க்கும் மேற்பட்டோர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சைஎடுத்துக்கொண்டதாகவளாகத்தில் உள்ள மருத்துவமனை மருத் துவர் தெரிவித்துள்ளார். அது தொடர்பான விவரங்களை யும் மாநகராட்சிக்கு தினமும் வழங்கி வந்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு மு. நடராசன்

### செப்டம்பர் 22 (2004)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.**

**ஆயிரம்விளக்கு பகுதியில் இருபத்தைந்து ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பத்து ஆண்டுகள் பகுதிக் கழகச் செயலாளராகவும், மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்டப் பொருளாளராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**சென்னை மாநகராட்சி 110வது வார்டு கவுன்சிலராக இருமுறையும், மண்டலக்குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இவரது பணியினை பாராட்டும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களிடம் இருமுறை கணையாழி பெற்றவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.